ஆவது 26

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

Sky தமிழ் TV CHANNEL

Sky Tamil Media Network (Pvt) Ltd

+94757000791 www.skytamilmedia.com skytamil.lk@gmail.com பதிவு இல: PV 00249082 ISSN 2792-1026

மாதந்தோறும் இதழ் - 26 30 ஜனவரி 2023 @skytamil.lk



2023இல் கத்தாரில் நடைபெறவுள்ள முக்கிய சர்வதேச நிகழ்வுகள்



நான்கு வயது சிறுமியின் திறமைக்கு கத்தாரில் பாராட்டு



இலங்கையில் உள்ள மின்னேரியா தேசிய பூங்கா



கத்தாரில் நடைபெற்ற தைப்பொங்கல் நிகழ்வு



துணிந்தெழு சஞ்சிகை 2nd Anniversary

சிரேஷ்ட எழுத்தாளரும் பன்னூலாசிரியரும்,
ஓய்வுபெற்ற ஆசிரியையுமான
திருமதி ஸக்கியா ஸித்தீக் பரீட்
அவர்களுடனான நேர்காணல்

# துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

@skytamil.lk

மாதந்தோறும் | இதழ் - 26 | 30 ஜனவரி 2023




## நான்கு வயது சிறுமியின் திறமைக்கு கத்தாரில் பாராட்டு



04 பக்கம்



05 பக்கம்


## கத்தாரில் நடைபெற்ற தைப்பொங்கல் நிகழ்வு







## 2023இல் கத்தாரில் நடைபெறவுள்ள முக்கிய சர்வதேச நிகழ்வுகள்


07 பக்கம்



20 பக்கம்


## இலங்கையில் உள்ள மின்னேரியா தேசிய பூங்கா





சிரேஷ்ட எழுத்தாளரும் பன்னூலாசிரியரும், ஓய்வுபெற்ற ஆசிரியையுமான திருமதி **ஸக்கியா ஸித்தீக் பரீட்** அவர்களுடனான நேர்காணல்


21 பக்கம்

**பிரதம ஆசிரியர்:**
ஷிஹானா நௌபர்

**இணையாசிரியர்:**
முனீரா வாஹித்
முஹம்மட் ஹாசில்

**நிர்வாக குழு:**
ஆர்.எம்.சப்ராஸ்
தாரிக் முஹம்மத்
குலசிங்கம் கிலசன்
ஜவ்சன் அஹமட்
பாத்திமா சகியா

**ஆசிரியர் குழு :**
எம்.பஹ்த் ஜுனைட்
கமறுன் நிஸாம்டீன்
எம்.ஏ.எப்.முபஸ்ஸிரா
மஜினா உமறு லெவ்வை
சிவபாலன் கற்ப ஹாசினி
பெனாஷில் ஷிப்னா
நிஹாசா நிசார்
றிஹானா இஷாக்

**மேற்பார்வையாளர்:**
றொஸான் முஹம்மட்
அஸ்வர் ரிஸ்வி

**ஆலோசகர்கள் :**
கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல்
கவிஞர் நஜ்முல் ஹுசைன்
ரஷீத் எம். பியாஸ் (நளீமி)
வசீமுல் அக்றம் - சட்டத்தரணி
பிஸ்ரின் முஹமத் - ஊடகவியலாளர்
ரினூசா நௌஷாட் - ஊடகவியலாளர்
ஜெஸீம் ஏ. ஹமீட் - ஐக்கிய இராஜ்ஜியம்

26 ஆவது
ஜனவரி மாத இதழ்

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

இறைவனின் அருளாளும், துணிந்தெழு வாசகர்களின் ஆதரவுடனும், சஞ்சிகை ஆசிரியர் குழுவினரின் விடா முயற்சியுடனும், புதிய மாறுதல்களுடன் வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது எமது துணிந்தெழு சஞ்சிகை. புகழனைத்தும் இறைவனுக்கே

துணிந்தெழு சஞ்சிகை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் எல்லாம்வல்ல இறைவனுக்கும், வாசகர்களுக்கும், சஞ்சிகை ஆசிரியர் குழாமிற்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.

தங்களது படைப்புகளும் எங்களது சஞ்சிகையில் இடம்பெற வேண்டும் எனின் கீழ் குறிப்பிட்ட ஈமெயில் மற்றும் வட்சப் இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்

+97431060249 | 0757000791
skytamil.lk@gmail.com
www.skytamilmedia.com



**ஜே.எம்.பாஸித்**
பணிப்பாளர்
ஸ்கை தமிழ் மற்றும்
துணிந்தெழு சஞ்சிகை
+94776391188



**ஷிஹானா நௌபர்**
பிரதம ஆசிரியர்
துணிந்தெழு சஞ்சிகை
+94781069510

#Thuninthelu #skytamil.lk skytamil.lk skytamil.lk
Scan QR Code

# நான்கு வயது சிறுமியின் திறமைக்கு கத்தாரில் பாராட்டு



மொஹமட் பாயிஸ் ஆதம்பாவா மற்றும் றிஸ்வானா மீராசாஹிப் தம்பதியினரின் புதல்வி பாத்திமா பின்த் பாயிஸ் அல்லாஹ்வின் அழகிய 99 திருநாமங்களை அழகான முறையில் மனனம் செய்து கூறி அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளார்.

சாய்ந்தமருதைப் பிறப்பிடமாக கொண்ட நான்கு வயது சிறுமி கத்தாரில் உள்ள இலங்கை பாடசாலை ஸ்டாபோர்ட்யில் கல்வி கற்று வருகிறார். இவரின் திறமையைப் பாராட்டி ஸ்கை தமிழ் பணிப்பாளர் ஜே.எம்.பாஸித் அவர்கள் பரிசு வழங்கி கௌரவித்தார்.





# கத்தாரில் நடைபெற்ற தைப்பொங்கல் நிகழ்வு

கவியரங்கம், சிறப்பு பட்டிமன்றம்,
பாரம்பரிய பரதநாட்டியம்,
வில்லுபாட்டு, பறை இசை மற்றும் சிலம்பாட்டம்

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு கத்தார் முத்தமிழ் மன்றம் மற்றும் கத்தார் தமிழ் சொல்வேந்தர்கள் மன்றம் இணைந்து நடத்திய கவியரங்கம், கிராமிய கலை, சிறப்பு பட்டிமன்றம் மற்றும் விருது வழங்கும் விழா 13.01.2023 வெள்ளிக்கிழமை மாலை 3:30 மணிக்கு மெர்குரி கிராண்ட் ஹோட்டலில் இனிதே நடைபெற்றது.

நிகழ்வில் ஆரம்பத்தில் செல்வி. சரண்யா திரவியம் பரதநாட்டியம் ஆடினார். அத்துடன் வீட்டில் பொங்கல் வைப்பதில் வல்லவர் ஆண்களா? பெண்களா? என்ற தலைப்பில் சிறப்பு பட்டிமன்றம் நடைபெற்றது. குறித்த பட்டிமன்றத்தில் ஆண்களே என்ற அணி வழக்கறிஞர் சிந்து தமிழ் அவர்களின் தலைமையில் திருமதி ஷோபா ராஜ், திரு சதீஸ்வரன் ஆகியோரும் பெண்களே என்ற அணி திருமதி. ரெஜினா கோபால்சாமி தலைமையில் திருமதி. வசந்தி நகுலன், திரு.அப்துல் ஹாழிர் ஆகியோரும் பங்குபற்றியதுடன், நடுவராக திரு விஜய் ஆனந்த் திகழ்ந்தார்.

மேலும் கவியரங்கத்தில் போகட்டும் துயரங்கள், போகியோடு! எனும் தலைப்பில் விஜயலஷ்மி, பொங்கல் வை புதுமை செய்! எனும் தலைப்பில் சிவசங்கர் பொங்கட்டும் அறச்சீற்றம் எனும் தலைப்பில் மனோ கௌதம், இனிவரும் காலம், இன்பம் பொங்கட்டும்! எனும் தலைப்பில் சிக்கந்தர் ஆகிய 4 கவிஞர்கள் கவி பாடினார்கள்.

அத்துடன் திருமதி. கிருஷ்ணவேணி மற்றும் அவரது குழுவினர் வில்லுப்பாட்டை இசைத்தனர்.

குறித்த நிகழ்வானது தமிழர் மரபுகள், பாரம்பரிய பரதநாட்டியம், கவியரங்கம், பட்டிமன்றம், வில்லுபாட்டு, பறை இசை மற்றும் சிலம்பத்தோடு அனைத்தையும் அழகாக ஒருங்கிணைத்து தமிழையும், தமிழரின் அடையாளத்தையும் கத்தாரில் பறைசாற்றியது என்பது குறிப்பிடத்தக்கது.

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதந்தோறும் | இதழ் - 26 | 30 ஜனவரி 2023



# கலியுக கோலம்

சுதந்திரம் என்ற பெயரில்
வரைமுறை இன்றி சுற்றிவர
இரையாகிப் போனாள்
அவன் இச்சைக்கு

பெண்ணாய் பிறந்திட்டவளுக்கு
பலியாய் வந்தது
அவள் கையில் குழந்தை எனும் உதிரம்.
தன் மானம் காக்க
பூமியில் குப்பையோடு குப்பையாய்
வீசப்பட்டு விட்டது அப் புனிதம்.
இருவரின் தவறுக்கு
அது செய்திட்ட பாவமென்ன

தான் அநாதையல்ல
என்பதை உணர்த்திவிட
"அம்மா" என்றே கத்தி விடுகிறது கலியுக
கோலத்தின் பாவம்

நி.பாத்திமா மல்கா



# மீனவன்

பாதை இல்லா ஊருக்கு
பனிப் பொழியும் காலையிலே
படகு தள்ளிப் புறப்பட்டான்
பார்த்துப் போய்வா என்றவளின் கணவன்

மீனுக்குப் பாய் விரித்து
காவலுக்கு அவன் இருந்தான்
காற்றுப் பாடல் அவன் கேட்டான்
நிலவின் காட்சி அவன் ரசித்தான்

ஊர் விட்டு வெகுதூரம்
ஆள் இல்லா ஊருக்கு
படகேறி வந்துவிட்டான்
புதையல் அதை அள்ளிச் செல்ல

மீனுக்கு தூண்டில் போட்டு
படகு அது மிதக்கும்
வீட்டுக்கு தூண்டில் போட்டு
அவன் மனமும் மிதக்கும்

நள்ளிரவு நண்பகலாகும்
நாட்களும் தண்ணீரிலே
தோன்றி மறையும்

ஊர் வந்து சேரும் வரை
தரைபடாது இவன் கால்கள்
மீனோடு இவன் வந்தால்
வறுமை தொடாது இவன் வீடு

ஹஸன் எம் பஜீத்
இலங்கை

# 2023இல் கத்தாரில் நடைபெறவுள்ள முக்கிய சர்வதேச நிகழ்வுகள்


இந்த ஆண்டுக்கான பார்மியூலா 1 கார் பந்தய தொடர் கத்தாரில் ஒக்டோபர் 6 முதல் ஒக்டோபர் 8 வரை கத்தாரில் உள்ள லுசைலில் நடைபெறவுள்ளது.




2023ம் ஆண்டு ஆசிய கோப்பை கால்பந்து போட்டியை கத்தார் நடாத்த உள்ளது. ஆசிய கோப்பை நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது. 2019 இல் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நடத்திய போட்டியின் கடைசி பதிப்பில் கத்தார் வென்றது. கத்தார் ஆசிய கோப்பை கால்பந்து போட்டியை நடத்துவது இது மூன்றாவது முறையாகும். போட்டி இந்த ஆண்டு நவம்பர் 20 அன்று தொடங்குகிறது.




2023 ஜெனிவா சர்வதேச மோட்டார் கண்காட்சி (Geneva International Motor Show - 2023) அக்டோபர் 5 முதல் 14 வரை தோஹாவில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வு பார்மியூலா 1 கார் பந்தய தொடர் உடன் இணைந்து நடத்தப்படும்.




எக்ஸ்போ 2023 கண்காட்சி ஒக்டோபர் முதல் 2024 மார்ச் வரை 6 மாதங்களுக்கு நடைபெறவுள்ளது. கத்தாரில் நடைபெறும் உலகளாவிய பெரிய நிகழ்வு இதுவாகும். இதில் 80 நாடுகளைச் சேர்ந்த பங்கேற்பாளர்கள் தங்கள் தயாரிப்புகள், சேவைகள் மற்றும் ஆராய்ச்சிகளை காட்சிப்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.





# நம் செயல் விளைவை நாமே தான் பெற வேண்டும்

சொல்லி கொடுங்கள்
கெஞ்சிப் போவதை
விட்டுப் போவதற்காக...
நாம் வாழ்ந்து போகலாம்.....

வீழ்ந்து போனாலும்
நாமே எழுந்து போகலாம்......
புரிந்திடும் வண்ணம்
நல்லபடி சொல்லுங்கள்....

நாம் கெஞ்ச ஒருவர்
உலகினில் இருந்தால்..
நம்மிடமும் கெஞ்சும் படி
நாம் ஏன் வாழக் கூடாது? ...

வாழும் வழி மாறினால்
வாய்ப்புக்கள் நமக்கும்
தேடி வந்து கதவு தட்டும்
கெஞ்சல் நிலை மாறும்..

கொன்று தின்னும் புலி
காப்போடு காட்டில் வாழ
விதைத்து உண்ணும் நாம்.....
ஏமாந்து போவது நாட்டில்...

நாளை வந்து நம்மிடம்
அவர் கெஞ்சிட வேண்டும்...
நாமும் தலை நிமிர்ந்து
நாட்டினில் நடந்திட வேண்டும்.........

முஹம்மட் நவீன்








# வீட்டு விடுதலையாகி

என் வீட்டுக்கு அடிக்கடி வரும் விருந்தாளி வீட்டுக் குருவி நேற்று வரவில்லை.அவளுக்கான படையல்கள் அப்படியே இருக்கின்றன. சோடியாக வந்து கண் சிமிட்டி கழுத்தை அங்குமிங்கும் திருப்பி அபிநயம் காட்டி தனக்குத் தெரிந்த நயனங்கள் எல்லாவற்றையும் என் கண்முன்னே காட்டி விட்டுச் செல்வாள் என் காதலியைப் போல.

அவளையும் காணவில்லை. இந்தக்குருவி போல் தான். ஒரு அரிசி மணியைக் கூட வைக்காது நீ உண்பது போல் உன் ஞாபக மணிகளை நானும் கொத்திக் கொள்கிறேன்.

கீச் கீச்சென சத்தமிடும் உன் குரல் கேட்டு கண் விழிப்பது போல் உன் சிரிப்பொலி கேட்டுத் தானே நான் விழிப்பேன். சமீப காலமாக பேச்சுவார்த்தையற்று தான் இருந்தோம். அமைதி பேச்சுவார்த்தையை யாரும் எங்களுக்குள் அனுமதிக்கவுமில்லை.

போராட்ட வாழ்க்கையைப் புகுத்தியவர்களே உன் பக்கம் தான் நாங்கள் அமைதி பூங்காவனமாகத் தானிருந்தோம் இந்தக் குருவிகளும் அப்படித்தானே

புல்லாங்குழல் வாசிப்பதற்கு பூகம்பத்தை அனுப்பியது யார் தெரியவில்லை. உன்னில் குற்றமில்லை என்னிலும் குற்றமில்லை என்ற ஆண் குருவியின் ஓலம் முகாரியாய் கேட்கிறது.

எனக்குப் போல எனக்கு எவ்வளவு வலியிருக்கும் உனக்கும் அவ்வலி இருக்கும் தானே ஏன் உன்னையும் என்னையும் பிரித்தனர் விளங்கவில்லை.

எங்கே குருவியே உன்னைத் தொலைத்தேன் புரியவில்லை எல்லோரும் சொல்கிறார்கள் நான் உன்னிலிருந்து விடுதலையானோம்
ஆனால் உனக்கு மட்டும் தான் தெரியும் கூண்டுக்குள் இந்த குருவி போல் நான் இருந்து கொண்டு உனக்காக உனக்கான நான் உனக்காவே விடுதலைப் பத்திரத்தைக் கண்ணீரோடு கவலையோடு தந்துவிட்டு சிறைக்குள் சென்றேன் என்று.

எனக்காக எனக்கான நானாக இன்னும் எனக்காக வாழவில்லை சகியே சந்தோஷமாய் நீ வாழ்கிறாய் என்ற சந்தோஷத்துடன் நான் வாழ்கிறேன்.

நான் எனும் நானாகவும் நானில்லை நீ எனும் நானாகவும் நானில்லை. குருவிகள் கூடு கட்டி வாழத்தானே வேண்டும். அதற்காக வாழ்கிறோம் என்பது தான் ஆழமனதின் உண்மை

வாழ்வென்பது விட்டு விடுதலையாகி பறத்தல் தானே சகியே.



தெலதோட்டை ஜெமீல்

# மௌன விரதம்



மௌன விரதமிரு
பிரச்சனைகளைச் சமாளிக்க
மௌனமாய் இருந்து விடு
ஏசுவார்கள் எதிர்ப்பார்கள்
கோபம் கொள்ளாதே
எந்த நேரத்திலும்
ரோசம் கொள்ளாதே

அலை பேசியைக்
காணவில்லை
அதன் இயக்கம் நின்று
நாலு நாள் என்று
பொய்களைச் சொல்லி விடு

உன் இயக்கம் நின்று
நீண்ட நாட்கள் என்று
ஒருவருக்கும் சொல்லி
விடாதே

வந்து வந்து சீண்டுவார்கள்
வரச் சொல்லித் தூண்டுவார்கள்

சேர்ந்து இருக்கையிலே
பொல்லாத கதைகள் சொல்வர்
அதைக் கேட்டு
சோர்ந்து போகாதே

காதில் வாங்கியதை
மூளைக்குள் செலுத்தாதே
தவறான கட்டளைகளைத்
தந்து உன்னை
மாட்டி விடும்

மௌனமாய் இரு
நிம்மதி காணாமல் போகாது
முகங்கள் மறு திசை
பார்க்காது
நீ விரும்பப்படுவாய்

அ . ஜெகன்
சுவிஸ்

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதந்தோறும் | இதழ் - 26 | 30 ஜனவரி 2023



# யதார்த்தங்கள்



- தஸ்கரை
நுஸ்லா ஸீபைர் -

சுப்ஹானல்லாஹ்! இஸ்லாம் எவ்வளவு இனிமையானது. மனதுக்கு இதமானது சுமையா வியந்துதான் போனாள். அது அவளது உம்மாவின் விளக்கத்தால் வந்த வியப்பு போன வாரம்தான் அவள் மாமி வீட்டில் மதினிக்குத் திருமணம் நடந்தது. அது சுமையாவின் தாயின் அண்ணன் மகள் திருமணம். அவளது தாய் பாத்திமா முடிந்தவரை பார்த்து பார்த்து எல்லாமே செய்தாள். மங்கிப் போயிருந்த திரைச் சீலையை மாற்றி புதுசாகத் தைத்துப் போட்டாள். பெண்ணுக்குத் தேவையான அத்தியாவசிய ஆடைகள் - குறைகள் எல்லாம் தேடித் தேடி நிவர்த்தி செய்தார்.

சமையலறை இத்யாதிகள் எல்லாமே இவள் கணக்கில் தான் நிரப்பப்பட்டன. கட்டில் விரிப்பு, தலையணை என்று எதையுமே அவள் விட்டு வைக்கவில்லை. அவளது சேமிப்பிலிருந்து சில இலட்சங்கள் சிதறித்தான் போயின. சுமையாவுக்கு எரிச்சலாகக் கூட இருந்தது. இருந்தும் என்ன செய்யலாம் இது அவள் தாய் பாத்திமாவின் வழி.அதை யாராலும் மாற்ற முடியாது. மௌனம் சிறந்ததென்று ஒதுங்கியே இருந்தாள்.

திருமணத்துக்கு முன்னைய நாள் தன் மூத்த மாமா, மாமி எல்லோரும் வந்தார்கள். புதுப்பெண்ணுக்கு ஒரு பரிசோடு தான் வந்தார்கள். 25,000 செலவில் ஒரு கைச் செயினைக் கொடுத்தார்கள். மறுகணம் வீடே கொண்டாட்டத்தில் மூழ்கிவிட்டது. ஆளாளுக்கு அதை ரசிப்பதும் புகழ்வதுமாய் எல்லோரும் ஒரு பெரிய ஆர்ப்பாட்டமே செய்து விட்டார்கள். சுமையாவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன.

கேட்டீங்களா? எத்தன தடவ சொன்னேன் கேட்டீங்களா? 25,000 எங்கே நீங்க செலவு செஞ்ச 2,3 லட்சம் எங்கே? அது மட்டுமா? யாராவது நீங்க செஞ்ச எதயும் பாராட்டினாங்களா? பொரிந்து தள்ளினாள் சுமையா ?

மகள் நாங்க எது செஞ்சாலும் படச்ச ரப்புட திருப்திக்கு மட்டும் தான் செய்யோனும் இப்பிடி மனிசர்கிட்ட நன்றி எதிர்ப்பார்த்து செஞ்சா ஒலகத்துல எதுவுமே நடக்காது. நான் செஞ்சது பெரிசா? அவ செஞ்சது பெரிசா? எண்டு அந்த ஆண்டவன் தான் கணக்கு பாக்குற மகள் நாங்க இல்ல.

இப்பிடித்தான் மா நீங்க எந்த நேரமும் தத்துவம் பேசுற. தாரிக்ட படிப்புக்கு கொஞ்சம் கொஞ்சம் எண்டு எவ்ளோ செஞ்சீங்க. கடைசில மாமா ஒரு தடவ குடுத்த 10,000/- தான் பேசு பொருளாச்சி. இத மாதறி எத்தன விஷயங்கள். எப்பதான் நீங்க படிப்பீங்களோ?

மகள் சுமையா ? மனுசண்ட இயல்ப எங்களால மாத்தேலா மா.யதார்த்தத்த புரிஞ்சு கொண்டா எதுவுமே கஷ்டமில்ல. கூலிய அல்லாஹ் கிட்ட மட்டும் தான் எதிர்பார்க்கோனும். மனுசன்கிட்ட இல்ல. நாங்க போறப்போ கை நிறையக் கொண்டு போனா அதுவே போதும் மா. மனுசன் கிட்ட எதிர்பார்த்தா மனக் கஷ்டம் தான் மிஞ்சும். ரப்பு கிட்ட எதிர்பார்த்தா நம்பிக்கையும் நிம்மதியும், சந்தோஷமும் சேர்ந்தே வரும். தாயின் வார்த்தைகள் அவளை வியக்க வைத்ததில் ஆச்சரியமில்லைதானே.





துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
அன்பான ஆதரவுகளோடு
இரண்டாவது ஆண்டிற்குள்
2
30 ஜனவரி 2023
WWW.SKYTAMILMEDIA.COM
Thuninthelu



# உதயத்திலோர் அஸ்தமனம்



இஸ்லாமியச் செல்வி அரபா.
கண்டி.

“ஹலோ நீங்க மிஸ்டர் நூஹ் லெப்பயா.....?”“ஓ... நான் நூஹ் லெப்பதான்.பேசுறேன்” “ரைட் ஓ.கே. நாம சமூக சேவா நலன் காக்கும் சங்கத்தில இருந்து கதைக்கிறம்.....உங்கட சேவைய பாராட்டி விருது வழங்கி கௌரவப்படுத்த இருக்கிறோம். ஜனவரி முப்பதாம் திகதி தாமரைத் தடாகத்தில விழா நடக்கப் போகுது. உங்களுக்கான அழைப்பிதழ் அனுப்பிட்டம்.”

சொன்ன குரல் சொல்லிவிட்டு பதிலுக்காக காத்திருக்காமல் முடித்துக்கொண்டது. நூஹ் லெப்பைக்கு ஒன்னுமே புரியவில்லை. தலை கிறு கிறுக்கத் தொடங்கிவிட்டது. இது... இது.... யாராச்சும் விளையாடுறாங்களோ என்னவோ....

அவர் சிந்தித்து முடிப்பதற்குள் தபாற்காரனும் வந்துவிட்டான். நூஹ் லெப்பையின் பெயருக்கு அழகானதொரு அழைப்பிதழ். பன்னிரண்டு வயதுப் பேத்திதான் அழைப்பிதழைப் பிரித்தாள். ஆச்சரியமும் சந்தோசமும் பொங்க ஏழு வீடுகளுக்கு கேட்குமளவுக்கு போட்டாளே ஒரு கூச்சல்...

“எங்கட அப்பாவ தாமரைத் தடாகத்துல கௌரவிக்கப் போறாங்கடோய்.....” வீடு பெருக்கிக் கொண்டிருந்த மருமகள் தும்புத் தடியை அப்படியே போட்டுவிட்டு முன் வராண்டாவுக்கு ஓடிவந்தாள். அண்டை அயல் உறவுகளுக்கெல்லாம் காட்டுத் தீ போல செய்தி பரவி விட்டது. கேட்கவா வேண்டும்.... அன்று அந்த ஊரின் ஷ்பெசல் நியுஸ் நூஹ் லெப்பையும் தாமரைத் தடாகமும்தான்.

சும்மாகிடந்த வாய்களுக் கெல்லாம் சுயிங்கம் கிடைத்ததுபோல.... இந்த தகவல் கிடைத்து விட்டது. தாமரைத் தடாகமுன்னா என்னா...? அது எங்க இருக்கு....? தேடல் செய்யும் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள, உலக அறிவு பத்தாத தள்ளாடும் பழையவர்களை, இந்த இளவட்டங்கள் எதை எதையோ சொல்லி சீண்டிவிட்டு அவர்களது திண்டாட்டத்தில் கொண்டாட்டம் காண்பது வேடிக்கையாக இருக்கிறது ... ∴ இது அந்தக் கிராமத்தின் வாடிக்கை.

அங்கு வந்து சேர்ந்த பாத்துமாமி " ஏன்ட அல்லாஹ்வே! படச்ச ரப்பே! என்ன கொதரத்துடா வாப்பா, அல்லாஹ்ட வூட்டுல அஞ்சி நேரம் பாங்கு செல்லி, தொழுது நோன்பு புடிச்ச மனுசனுக்கா இந்தக் கெதி வரோனும்..... இந்த வயசு போன காலத்துல என்ன பாவம் செய்ததுக்காக தாமரக் கொளத்தில கொரவிப் போடப் போறாங்க.? அழுது புலம்பி ஒப்பாரி வைக்கத் தொடங்கிவிட்டார். வந்தவர்கள் நொந்து கூறும் வார்த்தைகளில் நூஹ் லெப்பையும் கொஞ்சம் ஆட்டம் காணத்தான் செய்தார். தங்கள் தங்கள் அறிவுக்குப் பட்டதை எல்லாம் அலசி எடுத்தார்கள். "பொன்னாட போத்துவாங்களாம்...., பட்டமும் சூட்டுவாங்களாம்......, பெரியோரு கணக்கு காசும் குடுப்பாங்களாம்......."

பணம்..... கிடைக்கப் போகிறதே என்பதை அறிந்த சிலர் நூஹ்லெப்பையுடன் பாசம் பொழியத் தலைப்பட்டனர். பணம் என்றால் பிணமும் வாய் திறக்குமல்லவா.... பெறாமைக் கண்கொண்டு ஒரு சிலர் பார்த்ததோடு மட்டுமில்லாமல், "எம்பது வயசுக்கு கூடினாலும் குறையாத இந்த நூஹ் லெப்பயத்தான் பள்ளிவாசலால ஹஜ்ஜுக்கும் அனுப்பி எடுத்தாங்கதானே......," "கபன் பொடவய போத்தவேண்டிய வயசுல பொன்னாடயும், பன்னாடயும்..." "மோதின் என்ற பட்டம்தான் இருக்கே இதுக்குள்ள வேறு என்ன பட்டம்தான் கொடுக்கிறதாம்...." இப்படி இப்படி வயிற்றெரிச்சலை கொட்டித் தீர்த்தவர்களும் உண்டு.

"தாமரைத் தடாகமென்றா அப்படி ஒரு அழகு. அப்பா என்னய கட்டாயம் கூட்டிக் கொண்டு போகனும். அப்பா, ஒங்களுக்கு நெறைய காசு கிடைக்குமாமே எனக்கு ஐபோன் ஒன்று வாங்கித் தரோனும்." இது பேத்தியின் வேண்டுகோள்.

"அப்பா, ஒங்களுக்குத்தான் கட்டுக்கட்டா காசு கிடைக்கப்போகுது... நான் ஒங்கட மகனோட மகன். எனக்கு கிளாஸ் போற வாரதுக்கு ஒரு பைக் வேணும். பாத்து வச்சிட்டேன் நீங்க ஒரு லெட்சம் தந்தா மீதிய நான் பாத்துக் கொள்வேன்." இது பேரனின் வேண்டுகோள்.

"மாமா, கொழும்புல பெரிய எடத்துக்கலியா போகப் போற, இவங்க நாட்டு மனுசர், என்று தாரும் சொல்லப்படாது பாருங்கோ..... ஒங்களுக்கு புதசா சாரம், சேட் எல்லாம் வாங்கனும். அதோட வூட்ல எல்லாருக்கும் புதுசா உடுப்பு வாங்கனும். மாமா, கேட்கிறேனெண்டு தப்பா நெனக்க வேணாம். ஒங்களுக்கு கெடைக்கிற காசுல, நாலு பவுனுல காப்பு வாங்கித் தந்தா நல்லம். ஒங்கட பேத்திக்குத்தான். கையில காசு தங்காது இல்லயா மாமா. தங்கமும் வில கூடிட்டிலியா போகுது." மருமகளும் போடு போட்டுவைத்தாள்.

"வாப்பா, நீங்க பள்ளியில அறுபது வருசமா மோதின் வேல பாத்தீங்க. இப்பதான் பயன் கிடைக்க போகுது....வூட்டக் கொஞ்சம் திருத்திக் கட்டனும். டைல்ஸ் புடிக்கனும். இந்த திரிவீல் ஓடறதால மட்டும் இப்ப குடும்பச் செலவ சமாளிக்கிறதே பெரிய கஷ்டம். சைட் பிஸினஸ் செய்றதுக்கு ஒரு அஞ்சிலட்சம் தேவப்படுது. சரி வாப்பா நீங்க எனக்குத் தராம வேற தாருக்கத்தான் கொடுக்க....." மகன் தனது தேவைகளை முன்வைத்துவிட்டான்.

"ஏ வாப்பா நானும் நீங்க பெத்த புள்ளதானே. நானாக்கும், அவரோட குடும்பத்துக்கும் ஒதவி செய்யேலுமென்டா எனக்கும் ஒதவி செய்யத்தான் வேணும். வாப்பா, ஒங்கட மருமகன் வெளிநாட்டுக்கு போகப்போறாரு. ஏஜன்சி பெரியோரு கணக்கு கேட்கிற. கூலி வூட்ல எத்தன நாளக்கித்தான் வாழ்றது...ஒங்கள உட்டா எனக்கு வேறு.யாருதான் ஒதவி செய்ய இருக்காங்க?" கண்ணீர் பொழிய கதறிய மகள். "வாப்பா எங்களையும் ஒங்களோட விழாவுக்கு கூட்டிப்போங்களே." என்றாள்.

"என்ன நூஹ் லெப்ப, உங்க கூடவே நலவு நக்ஷ்டத்துல பங்கு போட்டுக்கொள்ற இந்த கூட்டாளிய மறந்துட்டீங்களா.....நானும் உங்க கூட தாமரத் தடாகத்துக்கு வரத்தான் போறன். மகள்ட கலியாணமும் கிட்டவாகிட்டுது. காசுக்குத்தான் இப்ப பெரிய முட்டுக் கட்டயா இருக்கு....:" பீடிகை போட்டார் நண்பர். நூஹ்

லெப்பை மௌனம் சாதித்தாலும்,தலைமீது பாரிய சுமை அழுத்திக்கொண்டே இருந்தது. எல்லோரும் அவங்க அவங்கட கோரிக்கைகள முன்வெச்சிட்டுப் போயிட்டாங்க இவனும் ஒரு மனுசன். இவனுக்குள்ளும் எத்தனையோ விருப்பங்கள் இருக்கும் என்பதை ஏன் மறந்துவிட்டார்கள்…? சும்மாவா அறுபது வருடங்களாக பள்ளிவாசலில் கடமை செய்த முஅத்தினார்.

“காசு கிடச்சா மௌத்தாப்போன என்னோட மனைவிக்கு ஒரு உம்ரா செய்யனும். ஓதப் படிச்ச வசதியில்லாத அண்டை அசலிலுள்ள பிள்ளயளுக்கு ஒதவி பண்ணனும்….” இப்படி எத்தனையோ ஆசைகள் கிடைக்கிறத வெச்சி புள்ளயளுக்கும் ஏதாச்சும் ஒதவி பண்ணனும்…..

உறவுகள் நண்பர்கள் என்று இருபது சகனுக்கு விருந்துச் சாப்பாடு. மக்களும் மருமக்களும் விரும்பியபடியே புதிய உடுதுணிகள்… குடும்பத்தோடு கொழும்புக்கு போய்வர வேன் ஹயர்…. கையில மடியில இருந்ததோட, தேக்குமர அலுமாரிகள், தளபாடங்கள் சில விற்றாகிவிட்டன. காசுதான் கிடைக்குமே. புதிதாக பொருட்கள் வாங்கிக் கொள்ளலாம். என்றமுடிவுடன் பயணமாயினர்.

விழா இனிதே நிறைவடைந்தது. தெஹிவல ஸூ பார்த்துட்டு,…. கோல்பேஸ் போய் ,…. மக்களின் விருப்பப்படி பிட்ஸாஹட் போய்,…. பிள்ளைகள் விரும்பும் சிற்றுண்டிகள் வாங்கிக் கொடுத்து…. போட்டோக்களும் பிடித்து,…. நள்ளிரவு வூடு வந்து சேர்ந்தாயிற்று. நூஹுலெப்ப கையில் காசுச் செக் உள்ள என்வலப். எல்லோர் பார்வையும் என்வலப்மீதுதான்.. திறந்தார்…… இருந்ததோ ஒரு செக்…. பேரன் அதனை கையிலெடுத்தான். உரத்து வாசித்தான்……ட்டுவெண்டி தவுஸன் ஒன்லி……..
உதயத்துக்காய் ஏங்கிய இதயங்கள் அஸ்தமனத்தில் உரைந்து …போயின….



# பத்திரிகைகள்






ரிஹானா அன்வர்ஷா
கம்பளை

"பத்திரிகைகள் காலதேவனின் அன்பு குழந்தைகள் அவற்றை அரவணைக்காவிட்டால் தூக்கமே வராது" இது பத்திரிகை பிரியர்களின் கூற்று. சமூக வலைதளங்களுக்கு அர்த்தம் தெரியாத காலக்கட்டத்தில் ஊடகங்களில் பிரசித்தம் பெற்றவைகளில் பிரதானமானது பத்திரிகைகளாக இருக்க வேண்டும். 19ம் 20ம் நூற்றாண்டுகளில் பத்திரிகைகள் நிறைய இலங்கையில் வெளிவந்து கொண்டிருந்தது. வாசிப்பை நேசிப்பவர்களும் நிறைய இருந்தார்கள். அவர்களில் வாழ்ந்து மறைந்த பல முஸ்லிம் அறிஞர்களை நாம் மறந்துவிட்டது வேதனைக்குரிய விடயமாகும்.

அந்த வகையில் பத்திரிகை உலகின் ஜாம்பவான் என்று அழைக்கப்படும் க.அ.மீரா முகையதீனையும் அவரது பத்திரிகையை பற்றியும் அறிந்திருக்க வாய்ப்பில்லை 1930களில் வாழைதோட்டத்தில் காலை மாலை பதிப்பாக மர்ஹூம் க.அ. மீரா முகைதீனால் வெளியிடப்பட்ட பத்திரிகையே இத்தினதபால் செய்திப்பத்திரிகை. வாழைத்தோட்டத்து வாரிசாகிய காதிபுல் ஹக் அல்ஹாஜ் எஸ். ஐ. நாகூர் கனி அவர்களின் கணிப்பின்படியும் நடமாடும் வாசிகசாலை என்றழைக்கப்படும் கனக செந்திநாதனின் "ஈழத்து இலக்கிய வளர்ச்சி" என்ற நூலிலிருந்து பெற்ற தகவலின்படியும் "க. அ. மீரா முகையதீனால் நடாத்தப்பட்ட தினதபால் காலை மாலை தினசரி தான் ஈழத்தில் வெளியான முதல் பத்திரிகை என்கிறார்கள் கொழும்பு வாழைத்தோட்ட மார்ட்டீஸ் லேனில் 7ம் இலக்க இல்லத்தில் தனக்கிருந்த அச்சகத்தில் தானே இரவு பகலாய் அச்சுக்கோர்ப்பார் பின்பு பக்கம் கட்டி தானே நகல் எடுத்துப்பார்த்து பிழை திருத்தி அதன் பின் கொழும்பு செட்டியார் தெருவில் 165ஆம் இலக்கதிலிருந்த ஆனந்தா பிரஸ்ஸில் அச்சிட்டு கொழும்பில் 2சதமாகவும் கொழும்பு தவிர்ந்த வெளி ஊர்களில் 3சதமாகவும் விற்பனை செய்தார்.

இது மட்டுமல்ல பர்மாவில் 1922ம் ஆண்டு "உத்தம



இது காலை பதிப்பு துரதிஷ்டவசமாக இப்பத்திரிகையின் மாலை பதிப்பும் முதல் பதிப்பும் கிடைக்கபெறவில்லை

மித்திரன்" எனும் பத்திரிகை இலங்கை, இந்தியா ஜவுளி வர்த்தக சங்கத்தின் தலைவர் பதவி கோ. நடேசையரின் தேசபக்தன் பத்திரிகையின் பொறுப்பும் ஆசிரியர் பதவியும், மும்பையில் இலஸ்ரேட்டட் வீக்லீ ஒப் இந்தியாவின் பகுத்தறிவு போட்டியான competitors common sense. Cross words puzzle weekly of Bombay என்ற போட்டியும் பல நாடுகளுக்கு பிரபல்யமானது. இந்தியா, பர்மா, மியன்மார், மலேசியா உட்பட ஆபிரிக்கா நாடுகளிலும் விற்பனையாகியது.

இவரது திறமையைக்கண்டு "All India weekly" ஏட்டின் ஆசிரியர் திரு "William Jackson" என்ற ஆங்கிலேயர் ஆங்கில அறிவும் மேதாவிலாசமும் கொண்ட இவர் ஆசிரியர்களுக்கெல்லாம் ஆசிரியர் என்றும் "இவர் ஆங்கில உடையிலன்றி தொப்பியும் சாரமும் அணிந்த ஒரு தமிழ் பேசும் முஸ்லிம் என்பதறிந்து பிரமித்தேன் " என்றும் புகழ்துள்ளார்.

நம் நாட்டு முன்னாள் நீதிபதி எம்.டி. அக்பர் இவரது ஆங்கில ஏட்டை பார்த்து இவரின் பெயரை அதில் கண்டு தன் ஆத்மீக பிரசுரங்களின் மொழிபெயர்ப்பாளர் இவரல்லவா? என்று அறிந்து அவரைப்பாராட்டி எழுதிய கடிதம் பின்னர் ஏடுகளில் பிரசூரமானது இப்படி பல சாதனைகளை புரிந்த மீரா முகையதீன் அவர்கள் 12.11.1953ல் இறையடி சேர்ந்தார்கள். அன்னாரது மகன் வழி பேரப்பிள்ளைகள் இன்றும் இலங்கை நாட்டின் கம்பளை நகரிலும் அவுஸ்திரேலியா, இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளிலும் வாழ்ந்து வருவது குறிப்பிடதக்கது. அதில் இன்னும் ஒரிருவர் கலை பயணத்தில் பயணித்து கொண்டிருப்பது மகிழ்ச்சியடைய வைக்கிறது.

# மனிதம் இங்கில்லை

மரத்துப் போன உணர்வுகளை மனதில் சுமந்து
மனம் போன போக்கில் மனிதன் பறக்க
மனிதம் உருவிழந்து கரைந்து காற்றோடு காற்றாகியது
மனதுக்குள் குடி கொண்டிட மனிதம் இனி இங்கில்லை.

இரத்த ஆறுகளுக்குள் சல சலக்கும் மனிதக்குரல்கள்
கண்ணீர் வெள்ளத்தில் மூழ்கும் மானிடர்கள்
காட்டுத்தீக்குள் சிக்குண்ட சிற்றிளம் பருவங்கள்
மீட்க மனிதம் இன்று இங்கில்லை.

அவலக்குரல்கள் சங்கீதமாகின
உயிருள்ள உடல்களும் ஜடங்களாகின
உரிமைகள் உறைகளுக்குள் மூடப்பட்டுவிட்டன
தட்டிக் கேட்க மனிதம் இன்று இங்கில்லை.

மனிதன் மனிதனாய் இனியும் மாறப்போவதில்லை
பண்புகள் பாசங்கள் பந்தங்கள் மண்ணோடு
மண்ணாகியது
உயிர்களும் உணர்வுகளும் மதிப்பிழந்து விட்டன
மானிட உறவுச்சங்கிலிகளில் இரத்தக்கறைகளே மிச்சம்

மனிதாபிமானங்கள் முற்றுப்புள்ளிகளாய் போக
மனிதமிருகக்குணங்கள் முழு உலகாய் தேறிய பின்பும்
மனிதன் தேடா மனிதம் புறப்பட்டு விட்டது
மனிதன் மனிதனாக மனிதம் இனியும் இங்கில்லை.

ஷிப்னா
நாவலப்பிட்டிய



# பெண்மை இனிதடா!

அண்டத்தில் படைத்திட்ட
அனைத்து உயிர்களிலும்
அருமையான இயற்கையின் படைப்பு பெண்மை!
அன்பென்ற சொல்லின் முழுமுதலான உருவம்!
அவனிக்கே சிறப்பளிக்கும் பெண்மையே இன்பம்!

அம்மா என்கின்ற அழைப்பினில் உருகிடும்!
அதனாலே உள்ளத்தில் நிறைவை அடையும்!
அன்புக்காகத் தன்னையே அர்பணித்துக் கொடுக்கும்!
அடுத்தத் தலைமுறையை உருவாக்கித் தந்திடும்!

அக்கினியாகச் செய்யும் செயலில் இறங்கும்!
அகத்தினிலே நம்பிக்கையை ஊன்றி வளர்க்கும்!
அன்றிலிருந்து இன்று வரை இருக்கும்
அகிலத்தில் நாம் பார்த்திடும் தெய்வம்!

அன்பின் மேன்மையால் அரவணைத்துச் செல்லும்!
அனுபவங்கள் சொல்லியே ஆசானாக அறிவுறுத்தும்!
அதீதமான அக்கறையுடன் நம்மைக் காத்திடும்!
அதனது துன்பங்களைச் சகித்துக் கொள்ளும்!

அதன் பண்பில் மட்டுமே கலப்படமில்லை!
அதனைப் போலெந்த உறவிங்கே இல்லை!
அகவை பலவானாலும் நாமென்றும் குழந்தை!
அப்படி எண்ணுவதே தாய்மையான பெண்மை!

அனைத்து மொழிகளிலும் அழகானது அம்மா!
அழைப்பதற்கும் இனிமையான சொல்லே அம்மா!
அல்லும் பகலும் நினைத்திருப்பவளே அம்மா!
அன்பைப் பொழிந்திடும் இறையவளே அம்மா!



கவிஞர் மாலதி இராமலிங்கம்,
புதுச்சேரி.

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

பதவி வெற்றிடங்கள்:

- Content creator
- Advertising executive
- Digital editor
- Social media manager

Join our team!

துணிந்தெழு சஞ்சிகையில் பணிபுரிய விரும்புபவர்கள் உங்கள் சுயவிபரக் கோவையை எமக்கு அனுப்பி வையுங்கள்.

Send your CV to:
skytamil.lk@gmail.com | 0776391188



Download

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதந்தோறும் | இதழ் - 26 | 30 ஜனவரி 2023




# மின்னேரியா தேசிய பூங்கா



எஸ்.ஐ.எம்.நிப்ராஸ்,
கல்குடா

வட மத்திய மாகாணத்தில் (பொலன்னறுவை மாவட்டம்) இத் தேசிய பூங்கா அமைந்துள்ளது. ஆகஸ்ட் 12 திகதி 1997 ஆம் ஆண்டு தேசிய பூங்காவாக அரசால் அறிவிக்கப்பட்டது.

இப்பூங்காவின் பரப்பளவு 8,890 ஹெக்டேர்களாகும். இலங்கையின் தலைநகர் கொழும்பிலிருந்து சுமார் 180 கிலோமீட்டர் தூரத்திலும் கொழும்பில் இருந்து பயண நேரம்: 3.45 முதல் 4.15 மணி நேரம் வரை பயணித்து மின்னேரியா தேசிய பூங்காவை அடைய முடியும். அதேபோல் பொலன்னறுவை மாவட்டத்தை அண்டிய 37 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. மேலும் உலகப் புகழ்பெற்ற சிகிரியா மலைக்குன்றிலிருந்து சுமார் 30 நிமிடம் பயணிக்கும் தூரத்தில் மின்னேரியா தேசிய பூங்கா அமைந்துள்ளது. அருகிலுள்ள நகரம் ஹபரணை.அருகிலுள்ள நகரத்திற்கான தூரம்: 8.5 கி.மீ ஆகும்.

இப்பூங்கா திறக்கும் நேரம் ஒவ்வொரு நாளும் காலை 6 மணி முதல் மாலை 6.30 மணி வரை டிக்கெட் வாங்குவதற்கான கடைசி நேரம்: மாலை 5.00 மணியாகும். மின்னேரியா தேசிய பூங்காவை பொருத்தவரை இங்கே பல்வேறு வகையான விலங்கினங்கள், பறவையினங்களைக் காண முடியும் அதனாலேயே இங்கு வெளிநாட்டு, உள்நாட்டு சுற்றுலா பயணிகள் தினம்தோறும் வருகை தருகின்றார்கள். இலங்கையில் காணப்படும் திறந்தவெளி பூங்காக்களில் ஒன்றாக மின்னேரியா தேசிய பூங்காவையும் குறிப்பிடலாம். இப் பூங்காவில் அதிக அளவிலான யானைக் கூட்டங்களை காண முடியும் சுமார் 350 இருந்து 700 வரையான யானைகள் காணப்படுவதாகவும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

குட்டி யானைகள் தங்களது தாய் யானைகளிடமிருந்து உணவுகளைப் பெற்றுக் கொள்ளும் அழகிய காட்சிகளை இங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் ரசிக்க முடிகின்றது. அதேபோல் ஆண் யானைகள் பெண் யானைகளுடன் சண்டையிடும் சுவாரஷ்யமான காட்சிகளைக் கூட நம் கண் முன்னே காணக்கூடியதாகக் காணலாம்.

ஆசியாவிலேயே அதிகளவான யானைகள் கூட்டங்களை ஒன்றாகக் கொண்ட இடமாகவும் இப் பூங்காவை குறிப்பிடலாம் .குறிப்பாக இப்பகுதிகளில் நீர்நிலைகள் அதிகமாகக் காணப்படுவதால் இங்கு யானைகள் வாழ்வதற்குரிய சூழ்நிலை காணப்படுகின்றது. மேலும் மகாசேனன் மன்னனினால்

கட்டப்பட்ட மின்னேரியாக் குளமும் இப்பகுதியிலேயே காணப்படுகின்றது. அதேபோல் இப்பகுதியை அண்டியதாகவே கிரித்தலை குளமும் காணப்படுகின்றது.

ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் மற்றும் செப்டெம்பர் மாதங்களில், வறண்ட காலங்களில், காட்டு யானைகள் உணவு மற்றும் தங்குமிடம் தேடி வஸ்கமுவ தேசிய பூங்காவில் இருந்து மின்னேரியா தேசிய பூங்காவிற்கு இடம்பெயர்கின்றன. மரங்கள் நிறைந்த பசுமையான இந்த சோலையைப் பார்க்கும் போது மனதுக்கு நிம்மதியும் சந்தோசமும் கிடைப்பதை இங்கு வரும் சுற்றுலா பயணிகள் உணர்கின்றார்கள்.

இங்கு சுற்றுலாப் பயணத்தைத் தொடர இருப்பவர்கள் குறிப்பாக அவதானிக்கப்பட வேண்டிய விடயமாக உங்கள் முன் நான் குறிப்பிட விரும்புவது தயவு செய்து இங்கே காணப்படும் வனவிலங்குகளையோ அல்லது பறவை இனங்களுக்கோ எவ்வித தீங்குகளும் விளைவிக்காது தங்களுடைய சுற்றுலாக்களைத் தொடர வேண்டும் அதேபோல் வனவிலங்கு திணைக்களத்தினால் இங்கே குறிப்பிடப்பட்டிருக்கும் அறிவுறுத்தல்களை செவ்வனே முறையாகப் பின்பற்ற வேண்டும் மேலும் கழிவுப்பொருட்களை வனவிலங்குகள் வசிக்கும் பகுதிகளில் வீசுவதோ அதேபோல் பொலித்தின் பொருட்களை மேற்படி இடங்களில் வீசுவதையோ இங்கு வரும் சுற்றுலா பயணிகள் கவனத்தில் கொள்ள வேண்டும். மனிதர்கள் வீசும் கழிவுப் பொருட்களை விலங்குகள் உண்ணுவதால் அவைகள் பல்வேறுபட்ட நோய்களுக்கு ஆளாக நேரிடக் காரணமாக அமைகின்றது.

எப்போது பார்வையிட வேண்டும்? ஆண்டு முழுவதும் பார்வையிடலாம் ஆனால் “ஏப்ரல், ஆகஸ்ட் முதல் செப்டம்பர்” வரை சிறந்தது. இங்கு வரும் சுற்றுலா பயணிகள் மேலும் கவனிக்கப்பட வேண்டிய விடயங்களாக இங்கே சரியான உணவகங்கள் வசதியின்மையால் நீங்கள் வருகின்ற போது தங்களுக்குரிய நீர் ,ஆகாரம் மற்றும் உணவுப் பொருட்களை கொண்டு வருவது சிறந்தது. மேலும் வெப்பம் அதிகமான நேரங்களில் தாங்கள் அணிந்து கொள்வதற்காக தொப்பி மற்றும் வெப்பத்திலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்வதற்கான பொருட்கள் முறையான காலணிகள் அணிந்து வருவது சிறப்பானதாக அமையும் இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளைக் காட்டுக்குள் அழைத்துச் செல்வதற்காக "சவாரி ஜீப்” மூலம் உள்ளே அழைத்துச் செல்லப்படுவார்கள் அதற்காக இங்கே வாடகை வாகனங்கள் பூங்காவின் முன்பகுதியில் தரித்து காணப்படும்.

இங்கே நீங்கள் யானைகள், சிறுத்தைகள், மான், மரை சோம்பல் கரடிகள், மான்கள், காட்டு எருமைகள், காட்டுப் பன்றிகள், முதலைகள், ஊதா நிற இலைக் குரங்குகள், முள்ளம்பன்றிகள் (porcupines) மற்றும் பலவகைப்பட்ட பறவைகள் உட்பட பூங்காவின் பல்வேறு வனவிலங்குகளை நீங்கள் பார்வையிட முடியும்.

உங்களுக்கும் சந்தர்ப்பம் கிடைத்தால் உங்கள் விடுமுறையை திட்டமிட்டு மின்னேரியா தேசிய பூங்காவை தரிசித்து பல்வேறு அனுபவங்களை பெற்றுக் கொள்ளுங்கள்



துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதந்தோறும் | இதழ் - 26 | 30 ஜனவரி 2023



# சிரேஷ்ட எழுத்தாளரும் பன்னூலாசிரியரும், ஓய்வுபெற்ற ஆசிரியையுமான "திருமதி ஸக்கியா ஸித்தீக் பரீட்" அவர்களுடனான நேர்காணல்

**வெற்றி, சாதனை, இலக்கினை அடைதல் போன்றவற்றில் பெண்களின் வகிபாகம் பல கடமைகளையும் பொறுப்புக்களையும் தாண்டியது. அமுக்கமும் அழுத்தமும் அதிகமாக இருக்கும் இடத்தில் இருந்து அபரிமிதமான ஆளுமைகள் தோன்றுவது சமூகத்திற்கான ஆசீர்வாதம். அந்த வகையில் எமது சஞ்சிகையூடாக பெண் ஆளுமையான கலாபூஷணம், சமாசிறி, தேசமானிய ஸக்கியா ஸித்தீக் பரீட் (வயது 76) அவர்களுடனான நேர்காணல் தொகுப்பினை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி.**

**நேர்காணல் :**
**ஷீபா இப்ராஹீம்** B.A SEUSL, M.A (R) UPDN
எழுத்தாளர், நூலாசிரியர், உளவியல் ஆலோசகர்
அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் - துணிந்தெழு சஞ்சிகை

**1. எங்கள் வாசகர்களுக்காக உங்களைப் பற்றிய ஓர் அறிமுகத்தினைத் தாருங்கள்?**

கேகாலை மாவட்டம், மாவனல்லை, தெல்கஹகொடையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, தெஹிவளையை வாழ்விடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற ஒரு பட்டதாரி ஆசிரியை நான். வயது 76. என்னிடமிருக்கும் எழுத்தாற்றலை, கலையுணர்வை, அறிவாற்றலை, அனுபவப் படிப்பினைகளை சமூகத்தின் விடியலுக்குப் பயன்படுத்த வேண்டும் என்ற மனிதாபிமான உணர்வில் நான் எழுதி வருகிறேன். எனது தாய் ஸாலிஹா பீ.பீ. தந்தை இப்றாஹீம் ஸித்தீக். எனக்கு எட்டு சகோதரர்கள். இரண்டு சகோதரிகள். நான் குடும்பத்தில் மூத்த மகள்.

நான் தெல்ககொடை முஸ்லிம் வித்தியாலயத்தில் ஆரம்ப கல்வி கற்று, உயன்வத்தை நூராணியா மகா வித்தியாலயத்தில் உயர்கல்வியையும் கற்றேன். எனக்கு 18வயதுடன் ஆசிரியர் நியமனம் கிடைத்தது. அளுத்கமை ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் இரண்டு வருடங்கள் பயிற்சி பெற்று உயன்வத்தை நூராணியா மாகாவித்தியாலயத்தில் நியமனம் பெற்று எனது ஆசிரியர்

பணிப் பயணத்தினை ஆரம்பித்தேன். எனது 21ஆவது வயதில் எனக்கு அப்துல் ரஸ்ஸாக் பரீட் எனும் ஆசிரியரை திருமணம் செய்து வைத்தனர். இக்காலகட்டத்தில் என்னுடைய தாயும் இறையடி சேர்ந்ததால் புதிய திருமண பந்தத்தில் இருந்த பொறுப்புக்கள், குடும்பத்தின் மூத்த புதல்வி என்ற வகையில் எனது 7 சகோதரர்களுக்கும் என்சார்பாக இருந்த பொறுப்புக்கள் மறுபுறம் புதிய ஆசிரிய நியமனம் போன்ற பலவகை பொறுப்புக்களை சுமந்து நின்றேன். அல்லாஹ்வின் துணையால் குடும்பநிலை உரிய பிரதியீட்டினால் ஒரு நல்ல நிலையை அடைந்தது.

## 2. உங்களுடைய அறிவு நாட்டத்தின் மீதான பயணம் மற்றும் ஆசிரிய பணி பற்றி குறிப்பிடுங்கள்?

எனக்கு உயர்தரம் முடித்துவிட்டு பல்கலைக்கழகம் நுழையவில்லையே என்ற ஆதங்கம் மனதில் தொடர்ந்தும் இருந்தது. இதன் விளைவாக நான் ஒரு குழந்தையை பெற்றெடுத்த பின் இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாக கலைமானிப் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்தேன். இதனைத் தொடர்ந்து எனக்கு இரண்டாவது குழந்தை கிடைத்த பின் கல்விப் பாதையில் மேலும் பயணிப்பதற்கு மத்தியில் பிள்ளைகளைப் பராமரித்தல் மீதான பொறுப்புக்களும் கடமைகளும் என்னை ஆட்கொண்டன. இதன் நீட்சியாக நாங்கள் குடும்பசகிதம் தலைநகருக்கு இடம்பெயர்ந்தோம். நானும் கொழும்பு டீ.எஸ் சேனநாயக்க கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றேன். ஏககாலத்தில் அதிபர் தேசபந்து ஜெஸீமா இஸ்மாஈல் அவர்களின் முஸ்லிம் மகளீர் கல்லூரிக்கு வருகைதரு ஆசிரியராகவும் 5வருடங்கள் பணியாற்றினேன்.

இக்காலத்தில் கொழும்பு பல்கலைக்கழகத்தில் எனது பட்டப் பின் படிப்பு டிப்ளோமாவை பூர்த்தி செய்து கொண்டேன் (Dip. In Edu). இன்னும் மனித உரிமைகள் கற்கையில் டிப்ளோமாவையும் பூர்த்தி செய்திருக்கிறேன்.

இப்படி நாட்கள் நகர்ந்து கொண்டிருக்கும் போது எனது




கணவரும் சுகயீனத்தால் இறையடி சேர்ந்தார்.

குடும்பத்தை தாங்கும் ஒற்றைப் பெண் என்றவகையில் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டிய கடப்பாட்டுக்கு தள்ளப்பட்டேன். பல சந்தர்ப்பங்களில் உடைந்தாலும் கஷ்டமான சூழலை இறை உதவியுடன் நல்ல முறையில் எதிர்கொண்டேன். இக்காலகட்டத்தில் இலங்கை அதிபர் சேவை இரண்டாம் தரத்திற்கான பரீட்சைக்கு தோற்றி அதில் தெரிவு செய்யப்பட்டேன். குடும்ப சூழல் அதிபர் பதவியை எடுத்து செய்து கொள்வதற்கு இடமளிக்கவில்லை. கொழும்பில் அஹதிய்யா மாணவர்களுக்கு 15வருட காலமாக கற்பித்தேன். அல்-முஸ்லிமாத், அகில இலங்கை இளம் மாதர் சங்கம் (YWMD) உட்பட பல பெண்கள் அமைப்புகளில் இணைந்து இதுவரை கிட்டத்தட்ட 40வருடங்களாக நான் வேலை செய்து வருகிறேன்.

இன்னும் கொழும்பு சாஹிரா கல்லூரியிலும் இணைந்து சேவையாற்றினேன். இக்காலம் என் வாழ்வுக்கு மீண்டும்





ஒளியூட்டிய காலமாக அமைந்தது. எனது முதலாவது நூல் பிரசவம் இடம்பெற்றது. கடந்த வருடம் இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டப் பின்படிப்பினையும் (M.A in Islamic Studies) பூர்த்தி செய்து கொண்டேன்.

### 3. சாதாரணமாக பெண்களின் வாழ்வியலை நோக்கின் வயது அறுபதோ எழுபதோ தனது பொறுப்புக்கள், கடமைகளில் இருந்து நீங்கி ஓய்வெடுக்க வேண்டும் என்ற ஒரு கட்டப்பாட்டினை விரும்பியோ, விரும்பாமலோ அடைவதுண்டு. உங்களின் இந்த 76வது வயதிலும் உம்மை பட்டப்பின் படிப்பிற்கு உந்திய விடயம் என்ன?

உண்மையில் எனது பட்டப்பின் படிப்பு காலத்திலேயே நான் வயோதிபத்தினாலும் நோய்மையினாலும் அதிகம் பாதிக்கப்பட்டேன். இருப்பினும் அவை அனைத்தையும் நான் இறை உதவியால் நல்ல முறையில் முகங்கொடுத்து எனது படிப்பையும் பூர்த்தி செய்தேன். இறுதிப் பரீட்சையில் எனது சக இளம் நண்பிகளின் கைதாங்கலாகவே பரீட்சை மண்டபத்திற்கு சமூகமளித்தேன். அரபியில் ஒரு பழமொழி உண்டு. “கருவறை தொடக்கம் கல்லறை வரை அறிவைத் தேடு” என்பதே அது. இதுவே என் கல்விப்பாதையின் முக்கிய குறிப்பு. இன்ஷா அல்லாஹ் என் மரணம் வரை நான் கல்விப் பாதையில் பயணிப்பேன்.

### 4. ஊடகத்துறையில் உமது பிரவேசம் எப்படி அமைந்தது?

என் கணவரின் மரணத்தை தொடர்ந்து நான் இத்தாவிலிருந்து வெளியேறி அடுத்த கட்டம் என்ன செய்வது என்ற கேள்வியும் எனது நேரத்தை வீணாக்கக் கூடாது என்ற தாகமும் அதிகமாகவே இருந்தது. அப்போது தான் நவமணிப் பத்திரிகையின் பிரதான ஆசிரியர் அல்ஹாஜ் என்.எம்.அமீன் அவர்களின் அழைப்பிற்கிணங்க நான் அப்பத்திரிகையுடன் இணைந்து செயலாற்றத் தொடங்கினேன். சுமார் 7வருடங்கள் நவமணி பத்திரிகையில் ஓர் எழுத்தாளராகவும் ஊடகவியலாளராகவும் சேவை செய்தேன். இக்கால கட்டத்தில் நான் அதிகமான மனிதர்களைச் சம்பாதித்துக் கொண்டேன். இதன் தொடரில் கொவிட் - 19 நோய்த் தொற்று அச்சக் காலப்பகுதியில் பத்திரிகைக் காரியாலயம் மூடப்பட்டதோடு இவர்களுடனான எனது பயணமும் குறுகியதை மன வருத்தத்துடன் நினைவுகூருகிறேன். இப்பத்திரிகை மென்மேலும் முஸ்லிம்களின் தனித்துவத்தோடு இயங்க வேண்டும், அதற்கு சமூகத்திலுள்ள புத்தி ஜீவிகள் முன்வர வேண்டும் என வேண்டிக் கொள்கிறேன்.

1985 லிருந்து இலங்கை வானொலி முஸ்லிம் நிகழ்ச்சி ‘மாதர் மஜிலிஸ்’ என்ற நிகழ்ச்சிக்குப் பிரதிகளும், சிறப்புப் பிரதிகளும் எழுதியிருப்பதுடன் நிகழ்ச்சிகளில்

பங்குபற்றியும் உள்ளேன். இதற்கு என்னை வழிப்படுத்தியவர் ஊடகவியலாளர் திருமதி புர்கான் பீ இப்திகார் அவர்களாவர். இன நல்லுறவு, சமாதானம் சம்பந்தமான நிகழ்ச்சிகளில் கலந்துரையாடியுள்ளேன். தொலைக்காட்சிக் கலந்துரையாடல்களிலும் நேர்காணல் நிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றியுள்ளேன்.

## 5. முழு சமூகத்திற்கும் முன்மாதிரியாக திகழும் சாதனைப் பெண்ணாகிய நீங்கள் பெற்றுக் கொண்ட விருதுகள் பற்றி பேசலாமா?

நல்லாசிரியர் விருது கொழும்பு ஸாஹிரா கல்லூரி - 2004

சமாதான பங்களிப்புக்காக (UNDP) - 2006

“சுனாமி“ தன்னார்வாளர் சேவைக்கு UN volunteers - 2006

ப்பியா நில இலக்கிய வட்டம் (இலக்கியத் தாரகை பட்டமும் விருதும்) - 2008

கொழும்பு மாவட்ட சாஹித்திய இலக்கிய விருது -2009

அகில இலங்கை சமாதான நீதிவான் நியமனம்- 2010

கலாபூஷண விருது - 2011

இஸ்லாமிய இலக்கிய விருது (மலேஷியா) - 2011

இன நல்லுறவுக்கான சாமசிறி விருது - 2012

மனித உரிமை சேவைக்கான விருதும் தங்கப்பதக்கமும்- 2012

சர்வதேச பெண்கள் தினத்தில் சேவைக்கான விருது (YWMA) - 2012

ஊடகவியல் துறைப் பங்களிப்புக்கான விருது (Sri Lanka Media Forum) - 2018

கொழும்பு மாவட்ட ஸ்ரீ விபூதி அரச விருது - 2018



எழுத்தாளருக்கான விஸ்வாமிநந்தன விருது -2018

தேசிய இலக்கியவிழா விருது கொழுப்பு மாவட்டம் -2020

இந்தியாவின் பிரபல இரு விருதுகள் - 2022

இளம் முஸ்லிம் மாதர் சங்கத்தில் இணைந்து இருபத்தொன்பது வருடங்கள் பணி புரிந்தமைக்காக சங்க உறுப்பினர்கள் விருது வழங்கி கௌரவித்ததுடன் மூன்று நூல்களை ஒரே மேடையில் வெளியிட்டமையைப் பாராட்டி இளம் முஸ்லிம் மாதர் சங்கத்தினர் பொன்னாடை போர்த்தி, மலர்ச்செண்டு வழங்கிக் கௌரவித்தார்கள். பொதுவாக விருதுகள் பெறுதல் என்பதை தாண்டி அதற்கு தகுதியுடையோராக நாம் எம்மை தயார்படுத்தி எமது வாழ்வை வாழ வேண்டும் என்பதே முக்கியம்.

## 6. உங்களுடைய நூல் பிரசவங்கள் மற்றும் எழுத்துத் துறை சார் சேவைகள் பற்றி பேசலாமே?

நூல் பிரசவங்கள் என்று கூறினீர்கள், ஆம் உண்மையில் ஒவ்வொரு நூலையும் எழுதி அதனை வெளியிடுவதென்பது, அதன் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை கடக்கும் ஒவ்வொரு சவால்களும், தியாகங்களும் சாதாரண தர வர்க்கத்தைச் சேர்ந்த சாமானியனுக்கு அது ஒரு சுகப் பிரசவம் தான். அந்தப்பொழுதின் வேதனை அதை சுதாகரித்துக் கொண்டால் இன்பமே.




**நான் எழுதிய நூல்கள்:**

சாஹிராவை உருவாக்கிய உத்தமர்கள் - 2004

இதயத்தின் ஓசைகள் (கவிதைத் தொகுப்பு) - 2010

விடியலின் விழுதுகள் (சிறுகதை தொகுப்பு) - 2010

முதிசம் (பொன்மொழித் தொகுப்பு) - 2011

பொது அறிவு தகவல் களஞ்சியம் - 2013

இஸ்லாமிய தகவல் களஞ்சியம் - 2016

நமது வரலாற்று ஆளுமைகள் - 2022

அச்சு வாகனம் ஏற காத்திருக்கும் நூல்கள்,

நமது வரலாற்று ஆளுமைகள் பாகம் 2

இஸ்லாமிய ஒழுக்க விழுமியங்கள்

பிராணிகளின் உலகம்

சர்வதேச தினங்கள்

எனது கணவர் 2010ல் இறையடி சேர்ந்தார். இதைத்தொடர்ந்து எனது எண்ணங்களும் வாழ்வும் கேள்விக் குறியாக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக எமது மார்க்கக் கடமையான 'இத்தா" அனுஷ்டித்த 4மாதங்கள், 10நாட்கள் காலப்பகுதியில் "இதயத்தின் ஓசைகள்" என்ற கவிதைத் தொகுப்பையும், "முதிசம்" என்ற பொன் மொழித் தொகுப்பையும் எழுதி 2011ல் வெளியிட்டேன். கொழும்பு ஸாஹிராவில் மாணவர் சஞ்சிகையொன்றைப் பொறுப்பேற்று 2007ல் பாடசாலையில் வெளியீடு செய்தேன். இஸ்லாமிய தகவல் களஞ்சியம் எனும் நூலையும் வெளியிட்டேன்.

நமது வரலாற்று ஆளுமைகள் என்ற நூலை கடந்த வருடம் மிகப் பிரமாண்டமான நூல் வெளியீட்டு விழாவின் மூலமாக வெளியிட்டேன். இது பகுதி 1 மாத்திரமே, இதன் இரண்டாம் பகுதியும் தாயாராகிக் கொண்டிருக்கிறது. மீதமிருக்கும் நூல்களை நல்ல முறையில் வெளியிட்டுக் கொள்ள எனக்கு உடல், உள சுகத்தை அல்லாஹ் தர வேண்டுமென பிரார்த்தித்துக் கொள்கிறேன். இறையடி சேர்வதற்கிடையில் 10 நூல்களையாவது வெளியிட வேண்டும் என்பது எனது அவா.

## 7. நீங்கள் எழுதி வெளியிட்ட நூல்களுக்கு யாரும் அனுசரணைகள் வழங்கி இருக்கின்றார்களா?

நிச்சயமாக இல்லை. அல்லாஹ்வின் அனுசரணை தான் பெரும்பாலும் எழுத்தாளர்களுக்கான அனுசரணை. எங்களுடைய சமூகத்தில் அளவுக்கு மீறிய மற்றும் தேவையில்லாத விவகாரங்களுக்கு பணம் செலவழிக்க


கலாபூஷணம் அரச விருதைப் பெற்றபோது...

முன்வரும் நபர்கள் இருக்கின்றார்களே தவிர இப்படியான எழுத்தாளர்களுக்கு அனுசரணை வழங்குவதற்கோ அல்லது உதவிக்கரம் நீட்டுவதற்கோ முன்வரக்கூடிய ஆளுமைகள் மிகக் குறைவாகவே இருக்கின்றார்கள். அதனால் என்னுடைய சொந்த செலவிலேயே அனைத்தையும் செய்தேன்.

## 8. உங்களுடைய வயது நிலை, நோய்மை, குடும்பக் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் இவற்றுக்கு மத்தியில் இவ்வளவு தூரம் சேவை செய்வதற்கும் கல்வியை தொடர்வதற்கும் உங்களுக்கு எது மிகவும் துணையாக அமைகின்றது என எண்ணுகிறீர்கள்?

நிச்சயமாக எனது ஆன்மீகத்தை நான் அடிக்கடி சரி பார்த்துக் கொள்வேன். எவ்வளவு சிறிய விடயமாக இருந்தாலும் சரி, உணவு தயாரிப்பதாக இருந்தாலும், எனது வளர்ப்பு மீன்களுக்கு தீனி இடுவதாக இருந்தாலும் சரி, என்னுடைய தோட்டத்திற்கு நீர் பாய்ச்சுவதாக இருந்தாலும் சரி அனைத்தையும் நான் அல்லாஹ் ஒருவனுக்காக என்ற எண்ணத்தில் மேற்கொள்வேன். அவ்வாறுதான் என்னுடைய வாழ்வின் அனைத்து செயல்பாடுகளையும் நான் இறைவனுக்காக என்ற நோக்கத்தோடு மாத்திரம் மேற்கொள்வதுண்டு. அதனால், அவனது அருள் என்றென்றும் என்னோடு இருப்பதை நான் உணர்கிறேன்.

மேலும், என்னுடைய நேரத்தை நான் மிகச் சரியாக திட்டமிட்டுக் கொள்வேன். அதிகாலையில் பஜர் தொழுகைக்காக எழுந்ததிலிருந்து அந்த நாள் என்ன செய்ய வேண்டும், எப்படி செய்ய வேண்டும் என்பதை நான் மிகச் சரியாக திட்டமிட்டு அதேபோன்று அதனை செயல்படுத்துவதற்கு என்னால் முடியுமான பிரயத்தனங்களை மேற்கொள்வேன். அத்தோடு எனக்கு துணையாக இருந்த என்னுடைய கணவன், என்னுடைய பெற்றோர்கள், என்னுடைய உடன்பிறப்புகள், என்னுடைய மகன்மார்கள் இவர்களுடைய உதவிகளையும் நான் இந்த இடத்தில் நினைவு கூறுகின்றேன்.

## 9. உங்களுடைய வாழ்க்கைப் பாதையில் நீங்கள் எதிர்கொண்ட சவால்கள் மற்றும் அவற்றை எதிர்கொண்ட விதங்கள் பற்றி கூறுங்கள்?

வாழ்க்கைப் பாதையில் சவால்கள் என்பது அனைவருக்கும் பொதுவான ஒரு விடயம் தான். குறிப்பாக நடுத்தர வர்க்கக் குடும்பத்தினைச் சேர்ந்த, அதுவும் பெண்ணாகப் பிறந்தவர்கள் என்கின்ற வகையில் என்னைப் போன்றவர்களுக்கு சவால்களும் அவை பிறக்கின்ற வழிகளும் கொஞ்சம் அதிகமாகத்தான் இருக்கும் என்பதில் ஐயமில்லை. அதற்காக வேண்டி அந்தச் சவால்களின் அதள பாதாளத்திற்குள் சிக்கி அதிலிருந்து வெளிவர முயற்சிக்காமல், போராடாமல் எந்த ஒரு மனிதனாலோ அல்லது குறிப்பாக பெண்ணாலோ தனது இலட்சிய பாதையில் பயணிக்கவும் முடியாது சாதனை படைக்கவும் முடியாது.

என்னைப் பொறுத்தவரையில் நானும் பல சவால்களை எதிர்கொண்டேன். பொருளாதார ரீதியாக, உறவுகள் ரீதியாக என்று பல இடை விலகல்கள் எனக்கு சவாலாக அமைந்தன. இருந்தாலும் நான் அவற்றை இறைவனின் உதவியோடும் தன்னம்பிக்கையோடும் மிகச்சுலபமாக கடந்து வந்து விட்டேன். குறிப்பாக ஒரு பெண்ணின்






வாழ்க்கைக் கட்டத்தில் அவள் முகம் கொடுக்கக்கூடிய ஒரு பாரிய இழப்பு நிறைந்த சவாலாக கணவனின் இறப்பினை குறிப்பிடலாம். எனது கணவன் இறந்தது என்னுடைய வாழ்க்கைப் பாதையின் மிகப்பெரியதோர் சவாலாக அமைந்தது.

எத்தனை வயதானாலும் பெண் என்ற வகையில் கணவனை இழந்ததன் பின்பும் நான் வெளியில் செல்வது, என்னுடைய கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுவது, சமூகத்திற்காக சேவை செய்வது என்ற என்னுடைய இந்த பணிகளின் போது எங்களுடைய சமூகம் என்னையும் விட்டு வைக்காமல் பல வார்த்தை பிரயோகங்களையும், பிழையான கதைகளையும் எனக்கும் என் காதுக்கு வந்தடையும் வகையிலும் பேசிக் கொட்டினார்கள். இப்படியான ஏச்சுப் பேச்சுகளுக்கு செவி சாய்த்துக் கொண்டிருந்தால் இலக்கினை அடைவது மிகவும் கடினம் என்பதை உணர்ந்திருந்த நான் அவற்றை இலகுவாகக் கடந்து வந்துவிட்டேன்.

இந்த சவாலை முகங் கொடுப்பதற்கு எனக்கு என்னுடைய பிள்ளைகளும் பிள்ளைகளின் மனைவிமாரும் மிகவும் ஒத்தாசையாக இருந்து பாதுகாப்பளித்து என்னோடு பயணித்தனர்.

அதேபோன்று என்னுடையிருந்த நண்பர்கள் உடனிருந்தவர்கள் என்று பலரும் தாங்கள் எனக்குத் தந்த ஆதரவினையும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொண்டது என்னைச் சுற்றி எதிர்மறையான சூழல் உருவாகுவது போன்று இருந்தது. இருப்பினும், எங்களுடைய தலைவர் எம் எஸ் எம் அஷ்ரப் அவர்கள் கூறியது போன்று "போற்றுபவர் போற்றட்டும், தூற்றுபவர் தூற்றட்டும், என் பணி தொடரட்டும்" என்கின்ற கூற்றுக்கிணங்க என்னுடைய வாழ்வும் பணியும் தொடர்ந்தது. இவற்றை தாண்டி சாதாரணமான சவால்களான போட்டி, பொறாமை, நயவஞ்சகத்தனம் போன்றவற்றையும் நான் எதிர்கொண்டு தான் இருக்கின்றேன். எல்லா நிலைமையிலும் நாம் எமது உள்ளத்தில் நிலைநிறுத்திக்கொள்ள வேண்டிய ஒரு விடயம் தான் சமூகப்பற்று எனக் கூடிய பொது நலம். தான் என்ற அகம்பாவமும் நான் மட்டும் என்ற சுயநலமும் இல்லாமல், நாம் என்கின்ற சமூகப்பற்றோடு எங்களுடைய அனைத்து சேவைகளையும் நாங்கள் மேற்கொள்ளப் பழகிக் கொள்ள வேண்டும்.

### 10. பெண்கள் சாதிக்க வேண்டும் என்ற வகையில் அவர்களுடைய வாழ்வியலுக்கு நீங்கள் வழங்கும் ஆலோசனைகள் யாவை?



சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில்...

முதலாவதாக நாங்கள் அனைவரும் மார்க்க வரையறைகளுக்குள் இருந்து கொண்டு மார்க்கம் அனுமதிக்கக் கூடிய விடயங்கள், மார்க்கத்தின் அனுமதிக்குட்பட்ட எமது ஆசைகள் கனவுகளுக்காக வேண்டி உழைத்தல், தியாகம் செய்தல், அர்ப்பணிப்புச் செய்தல் என்பது ஒருபோதும் தவறில்லை என்பதை நாம் அனைவரும் எங்களுடைய மனதில் நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும். அதேபோன்று எங்களுடைய மார்க்கக் கடமைகளை நாங்கள் உரியவாறு நிறைவேற்றிக் கொள்வதுடன் அல்குர்ஆனுடனான எங்களுடைய உறவினை நாளுக்கு நாள் மேம்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும்.

அடுத்து எங்களுடைய நேரத்தை மிகச் சரியாக திட்டமிட வேண்டும். பொதுவாக நேரம் பொன் போன்றது, கண் போன்றது என்றெல்லாம் உவமிப்பார்கள். எங்களுடைய கண் செயல் இழந்து விட்டால் வேறு கண் மாற்ற முடியும், எங்களுடைய பொன் திருட்டுப் போய்விட்டால் உழைத்து எடுத்துக் கொள்ள முடியும். ஆனால், இவை இரண்டிற்கும் அப்பாற்பட்ட மிக மகத்துவமான ஒன்றுதான் நேரம். இதனை மிகச் சரியாக திட்டமிட்டு எங்களுடைய வாழ்வியலை கொண்டு செல்ல வேண்டும்.

எங்களுடைய குடும்பத்தை நாங்கள் சரியான முறையில் ஒழுங்கமைத்துக் கொள்ள வேண்டும். சமூகத்தின் அடிப்படையாக இருப்பது குடும்பம் என்ற வகையில் குடும்பத்திலுள்ள நபர்களுக்கிடையில் அழகான புரிந்துணர்வு, விட்டுக் கொடுப்பு, அன்பு போன்றவற்றை பரஸ்பரம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அடித்தளம் நல்ல முறையில் அமையும் பொழுது தான் நாளை சமூகத்தில் நாங்கள் எங்களுடைய சேவையினை மேற்கொள்வதற்கு மிகவும் இலகுவாகவும் உறுதுணையாகவும் அமையும்.

எங்களைச் சுற்றி பேசப்படுகின்ற எதிர்மறையான விடயங்களை விட்டும் எங்களுடைய காதுகளை நாங்கள் தூரப்படுத்திக் கொள்ள வேண்டும். எங்களுடைய இலக்கினை திட்டவட்டமாக தீர்மானித்து நேரத்தினை மிக நல்ல முறையில் பங்கிட்டு எங்களுடைய வேலையினை செய்வதால் மாத்திரமே நாங்கள் சாதிக்க முடியுமே தவிர எங்களைச் சுற்றி குறை கூறி புறம் பேசித் திரிகின்ற நபர்களுடைய பேச்சுக்களை செவிமடுத்து எங்களுடைய உள்ளத்தையும் காதையும் பழுதுபடுத்திக் கொள்ளாமல் அவர்களை புறந்தள்ளி அவர்களுடைய பேச்சுக்களை விட்டு தூரமாகி எங்களுடைய விடயங்களை நாங்கள் செம்மைப் படுத்திக் கொள்ள வேண்டும்.

எங்களுக்கென்று பொழுதுபோக்குகள் இருக்க வேண்டும். எந்த நேரமும் வீட்டில் உள்ள வேலைகள், சமையலறையில் உள்ள வேலைகள் என்று தொடர்ந்தும் எங்களை நாங்கள் வேலையில் ஈடுபடுத்திக் கொண்டே இருந்தால் ஒரு கட்டத்தில் சோர்ந்து விடுவோம். இவ்வாறான நிலைமையை தடுப்பதற்கு எங்களுக்கென்று தினந்தோறும் செய்யக்கூடிய ஏதாவது பொழுதுபோக்கு இருக்க வேண்டும். புத்தகம் வாசித்தல், வீட்டுத்தோட்டம் செய்தல், மீன் வளர்த்தல், கைப்பணி வேலைகளை செய்தல், கலை ஓவியங்களில் ஈடுபடுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

அடிக்கடி எங்களுடைய குடும்பத்தினர்களுடன் நாங்கள் ஒன்றாக இருக்க வேண்டும். குடும்பத்தில் உள்ள அனைத்து நபர்களும் ஏதோ ஒரு வேலையில் அல்லது கல்வியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள். நேரம் கிடைக்கின்ற பொழுது குறைந்தது ஒரு வாரத்திற்கு ஒரு தடவையேனும் அனைவரும் ஓரிடத்தில் அமர்ந்து ஒன்றாக நேரம் செலவழிக்க வேண்டும்.

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதந்தோறும் | இதழ் - 26 | 30 ஜனவரி 2023




# போதையின் வீணையில் வீணான வாகை

போதை விரிந்த பாதையிலோர் பயணம்
பேதையாய் இருந்தவன் போதைக்கு மேதையானான்
பெற்ற மனம் கதறியழ காற்றில் கலந்த வார்த்தைகள்

தடுமாறும் வயதினில் போதைக்கு கைகொடுத்து தடம்
மாறினான் விட்டுப் பிரிய எண்ணினாலும்
விடமாட்டேன் என்கிறது போதையின் வாசம்
போதைக்கு அடிமையாக அன்பின் உருவங்கள்
எல்லாம் சிதைந்தன

முன்னேற முனைந்தவனோ முடங்கிப் போனான்
போதையின் பிடியில் உணர்வுகளை சிதைக்கும்
ஊமை போதை உத்தமனாய் வாழ விடாது
உருக்குலைக்கும் அரக்கனானான்

நிமிர்ந்த தந்தையின் சிரம் குனிந்ததே சட்டத்தின்
முன் வளர்ப்பு சரியில்லை என சமூகத்தின்
பேச்சுக்களே தந்தையின் காதுகளில்
எதையும் சிந்திக்காது போதையே எனக்கு
என்றாகியதே வாழ்வு

ஒரு நிமிடம் சிந்தித்தாயா ஒரு நொடி சந்தோஷமே
இவ்வற்ப போதையில் கழிக்கின்ற காலமெல்லாம்
வாகையின் வாசம் கருகின்றது
முடிகின்றது காலம் கனவுகளை முறித்துக்கொண்டு

முத்தாய் பெற்றெடுத்தவன் மண்ணுக்குள்
மழுங்கிப்போகிறான் உயிருடனே..

-றிஸ்மா றிf்ப்கான்-




# போதைக்கு அடிமையானால்

போதைக்கு அடிமையாகிப் போகாதீர்
புத்தி மழுங்கி நித்தம் வாடாதீர்-அது
சுயநினைவை இழக்கச் செய்யும்
சுற்றத்தாரையும் வெறுக்கச்செய்யும்

மனவிரக்தியை அதிகரிக்கும்
துர் மரணத்தை உனக்கு பரிசளிக்கும்
ஊண் உறக்கமும் மறக்கச்செய்யும்
உடலிலே பற்பல நோய்கள் வரும்

இளமை எழில் குறைந்து
உடல் முதுமை பெறும்
உன்னை ஈன்றோர்கும் தினம் தினம் கவலை தரும்
காசு பொருட்களை திருடவைக்கும்
உனக்கு- காமுகனெனும் பட்டமும் தரும்

கொலைகூட உன்னைச் செய்யத்தூண்டும்
தீய பழக்கம் கேடுதரும்
திருந்தி வாழ்ந்தால் உன்
எதிர்கால வாழ்கை சிறப்பாகும்.

இராசமாணிக்கம்.வசந்த்
முறக்கொட்டான்சேனை
தேவபுரம் தற்போது கத்தாரில்



# சுவனத்துக் காதல்



பாத்திமா ஹகீமா அமீனுதீன்
ஓட்டமாவடி

சுவனத்து உலகில் பாதம் பதிக்கும் முதல்
நொடியிலேயே என்னவன் உன் முகம் தேடி நிற்பேன்...

மேகத்தின் நுழைவாயிலில் முகில்கள் பரந்து சூழ
கஸ்தூரி வாடை வீசும் கம கம ஆடையோடு
குர்ஆனிய வரிகளை நாவுகளால் இசைத்துக் கொண்டே
என் அருகில் வந்து என் கரம் பற்றிக் கொள்வாய்...!

என்னைப் பார்த்து உன் முத்துப் பற்கள் மின்ன
புன்னகை வீசி என் கரங்களில் உன் அன்பு முத்தத்தை
தெளிப்பாய்...

பல லட்சம் மெழுகுவர்த்திகள்
நம்மை வரவேற்க ஒட்டு மொத்த சந்தோஷத்திற்கும்
ஒரு வினாடியில் விடை கிடைப்பது
போல எனக்கான அதே கண்களின் தரிசனத்தில்
பூரித்துப் போய் வதனத்தில் புன்னகையை
பூசிக்கொள்வேன்...

அண்ணலாரின் முன்னிலையில்
அசத்தலாய் என் தந்தை என் நெற்றி முடி பற்றித் தர
மலக்குமார்கள் சுற்றும் சூழ்ந்து வானுயர பிரார்த்தனை
மழை பொழிய சஹாபாக்கள் புன்னகையோடு எமக்குப்
பூத்தூவ நம் குடும்பம் ஆனந்தத்தோடு எம்மை சுற்றி
நிற்க அழகாய் நம் இரு மனம் இணையும்
திருமணம் அந்நாளில் ஜன்னத்துல் பிர்தௌஸில்
நடக்கும்...

உன் கைவிரலை இறுக்கப் பற்றிக்கொண்டு உன்
தோளில் சாய்ந்தவாறே
ரோஜாத் தோட்டத்தில் பாதம் பதிப்பேன்...

சிவப்பு ரோஜாக்களோடு உன் இதழை ஒப்பிட்டு
நோக்கிக் கொண்டே உனக்காக நான் எழுதி மடித்த
கவிதைகள் ஒவ்வொன்றையும் வாசித்து
காண்பிப்பேன்...

உலகத்தில் எனக்கிருந்த பேராசை
போலவே சல சலவென துள்ளியோடும் ஒரு நதி
ஓரத்தில் நமக்காய் சிறு
வீடொன்று அமைப்போம்...
அந்திமாலை நேரமொன்றில்
ஒற்றை நிலா மட்டும் வானில்
சிரிக்க நீயும் நானும் படகுப் பயணம் செய்வோம்...

பயணத்தின் நடுவினிலே வடிந்தோடும் நதியின்
சுவனத்து தேனை ஓர் கிண்ணத்தில் அள்ளி உன்னை
பருகச் செய்வேன்...

நம் உயிர் நதியில் கொண்ட உண்மைக்காதலை
முடிவில்லா உரையாடலில்
ஒருவருக்கொருவர் பகிர்ந்தளிப்போம்...

கொட்டும் மழைத்தூரலில் ஒன்றாய் நனைந்து
அன்பெனும் ஊஞ்சலில் ஆராதனை செய்வோம்...

என் கண்ணை விட்டு எங்கேயும் நீ போய் விடாமல்
காதலின் கருவிழியில் கண்மணி உன்னை கவனமாய்
தாங்கிக்கொள்வேன்...

இடப்பக்கம் பாயும் நீருற்றில்
வுழு செய்து நீ இமாமத் செய்ய உன் பின் நான் நின்று
இறைவனுக்காக ஆயிரம் தடவை ஸுஜூதுகளில்
ஒன்றாய் சிரம் பணிவோம்...

உயிர் நனையும் பனித்துளியும்
உள்ளம் குளிரும்  உணர்வலைகளும்
நமக்காக பிரார்த்திக்கும் பிரார்த்தனைகளின் இசையும்
நம் காதுகளில் எப்போதும் வீழ்ந்து
கொண்டேயிருக்கும்...

எல்லாவற்றையும் விட எனக்கு உலகிலேயே
இறைவன் அளித்த என் சுவனமாய் நான்
நேசித்த என் உயிரின் பாதி இறை பொருத்தத்துடன்
அவன் வழங்கிய சுவனலோகத்தில்
எனக்கே எனக்காக இனியொரு பிரிவேயின்றி
என்னருகே
அந்த சுவனத்துக் காதலின் மடியில் தலைவைத்து
உறங்க நெற்றி முத்தமொன்று கிடைத்ததை விடவா!
வேறு என்ன வேண்டும்???

நீயே என் சுவனம்...
நீ மட்டுமே வேண்டும் அவ்வழியா
சுவனலோத்திலும்...

# ஒரு சூரியனின் தாமரை நீ



புரிந்து கொண்டால் மட்டுமே தெரியும் வாழ்க்கை
போல உணர்ந்து கொண்டால் மட்டுமே புரியும்
காதல் போல இருவரும் உள்ளோம் ஒரு
ஒருவருக்காக.

காலம் நமை சேர்க்கும் அந்த இருள் போகட்டும்.
விடியமுன்பு தொலைந்த நானும்
மலரமுன்பு தொலைந்த நீயும் இருக்கின்றோம்
ஒரு கருவுக்குள் இருக்கும் இரு குழந்தைகளாக.

எனது வெப்பத்தின் சூட்டை
உனது அன்பும் அந்த ஒரு நொடி பார்வையும்
குளிர்விக்கின்றது.

தாமரையாக நீ உள்ளாய் சூரியனாக
நானுள்ளேன்.

நிர்ப்பந்தம் நிமிர்த்தம்  பிறந்த மனிதர்களுள்
கடலின் கடைசி துளியாக அன்பு உள்ளது.

அதனால் தான் இப்பூமி இன்னும்
மனிதர்களை உற்பத்தி செய்ய
அனுமதிக்கின்றது.



பாத்திமா நஜ்மியா



# நேர்மறை தூண்டல்!



சி. ஹறிசுவேதா
சேலம், இந்தியா.

காலத்தின் நவரசங்கள் வாழ்க்கை. அந்த நவரசங்களில் ஒன்று கூடினாலோ குறைந்தாலோ வாழ்வது தான் கடினம். சுதந்திரமாக பறக்கும் பறவைகளுக்கு எவ்வளவு தூரம் பயணிக்க வேண்டும் என்ற இலக்கு இருக்கும். இலக்கு இல்லாத வாழ்க்கை சுவாரசியமாக இருக்காது. இங்கு வாழ்கின்ற உயிர்களும் சரி.. மனிதனும் சரி.. வாழ்க்கையின் ஆழத்திற்கு சென்று மீண்டு வரும்போது தான் வாழ்க்கைக்கான அர்த்தத்தையே புரிந்துக் கொள்ள முடிகிறது. மனிதன் என்பவன் யார்? மனிதம் என்பது என்ன?

மனி (Money) என்றால் ஆங்கிலத்தில் பணம். பணம் உள்ளவனே மனிதன் என்று கூறுபவர்களும் உண்டு. ஆனால், பூ விற்கும் மூதாட்டி ஒருவர், பூக்களை விற்பனை செய்வோரிடம் புன்னகை பூத்த முகத்துடன் நீடுழி வாழ்க என்று கூறி பூவை கொடுக்கும் போது, ஒரு வித உவகையோடு அன்றைய நாள் இருக்கும். இது தான், அவர்கள் நம்மிடம் காண்பிக்கும் மனிதம்.

இது போன்ற உள்ளம் கொண்டவர்களே மனிதர்களாகிறார்கள். மனிதம் என்ற சொல்லுக்கான அர்த்தத்தை புரிந்து கொள்பவனே மனிதன். கிட்டத்தட்ட மனிதன்-மனிதம் இரண்டும் ஒரே அர்த்தமாக தான் இருக்க முடியும். மனித விழுமியத்தின் கதவை திறந்து பார்த்தாலே, ஒழுக்கமும் வாழ்வும் சீர்படும். விழுமியம் என்பது ஒரு மனிதனின் எண்ணம், நம்பிக்கை, கருத்து போன்றவற்றை சரியான பாதையில் பின்பற்றுவது.

நிரந்திரமில்லா இவ்வுலகில் அன்பும், மகிழ்ச்சியும் தற்காலிகம் தான். ஆனால், தூய அன்பு நிலையானது் மகிழ்ச்சி நிலையற்றது. ஆயிரம் உறவுகள் நம்மை சுற்றி இருந்தாலும், நம் கையை பிடித்துக் கொண்டு இறுதி வரை வரும் உறவே உண்மையானது. அதுவே மகிழ்ச்சியையும் தரும். வயதான கணவன் மனைவியின் அன்பு எடுத்துக்காட்டாக, நரை முதிர்ந்த பாட்டியின் பாதத்தில் முள் குத்திவிட்டதால், தன் பார்வை மங்கிய கண்களால் கைகளில் உள்ள சிறிய ஊசியினால் அதை தடவி கணவன் எடுக்கின்ற போது, அவர்களது இருவரது மனதிலும் ஆழமான அன்பு அழகாகவும், மகிழ்ச்சியாகவும் தோன்றியது. "மகிழ்ச்சியே வாழ்க்கையின் அர்த்தமும் நோக்கமும், மனித இருப்பின் முழு நோக்கமும் முடிவும் ஆகும்" என்பது

அரிஸ்டாட்டிலின் கூற்று. மகிழ்ச்சி வகை ஒவ்வொருவருக்கும் மாறுபடும். ஒருவனே பல வடிவங்களில் மகிழ்ச்சியை உணர்கின்றான்.

உதாரணமாக, ஒருவருக்கு சுற்றுலா செல்வது மகிழ்ச்சியைத் தரும்.. இது ஒரு வகை மகிழ்ச்சி.. யாருடன் செல்வது கூடுதல் மகிழ்ச்சியைத் தரும்? என்பது வடிவம்.. எப்போதுமே புன்னகை முகத்துடனே இருக்கின்ற ஒரு முதியவரிடம், ஒரு இளைஞன் கேட்கிறான்: உங்களுக்கு துன்பம் என்பதே கிடையாதா? நீங்கள் தான் மகிழ்ச்சியான மனிதராக இருப்பீர்கள் என்று நினைக்கிறேன். அதற்கு முதியவரின் பதில், புன்பட்டவனின் மனதை அவனே சமாதானப்படுத்தும் கருவி தான் புன்னகை. ஒரு சிலருக்கு அந்த முகம் இயற்கையாகவே இருக்கிறது.. அது கடவுள் கொடுத்த வரம் என்று புன்னகைத்து கொண்டே கூறினார்.

அனுபவமே சிறந்த ஆசான் என்று கூறுவார்கள். அனுபவம் நமது தவறுகளை திருத்திக் கொள்ளவும் செய்கிறது. ஒரு விஷயத்தை கற்றுக் கொள்ளவும் செய்கின்றது. இதைத் தான் அனுபவ அறிவு என்கிறோம். ஒருவன் வளர்கின்ற சூழ்நிலை, கற்றுக்கொள்ளும் செயல், மனதில் உள்வாங்கும் விஷயம் இவற்றை பொறுத்தே, அவன் நல்ல அனுபவங்களை பெற்றிருப்பானா? என்பதை கூற முடியும். நல்ல அனுபவங்களை பெற்றிருந்தால் மட்டுமே சிறந்த அனுபவசாலியாக இருக்க முடியும். ஒரு மனிதனின் அனுபவம் அவன் இலக்கை அடைய துணை புரிகிறதா? என்று கேட்டால் நிச்சயம் துணை புரியும். பூப்பந்து விளையாட்டு வீரர் ஒருவர் விளையாடுகின்ற போது, அவர் பலமுறை தோல்வி அடைந்துள்ளார். சர்வதேச அளவில் அவர் விளையாடிய போது வெற்றி பெற்று விட்டார். அப்போ, அவர் தோல்வி அடைந்த போது, தான் பெற்ற அனுபவத்தையும், தோற்றதற்கான காரணத்தை ஆராய்ந்த தால் தான், சர்வதேச அளவில் வெற்றியும் பெற்றார்.

நம் கண்களில் உள்ள லேக்ரிமல் சுரப்பி சுரக்கின்ற கண்ணீரில் வலி மிகுந்த பாதையின் பயணங்கள் நிறைந்திருக்கும். வலி மிகுந்த பாதையிலும் நல்ல எண்ணங்களே நம்மை வலிமை படைத்தவனாக வைத்திருக்கும். நல்லதையே நினைத்து, நல்லதையே செய்தால் வாழ்வின் பயணம் இனிப்பாய் இருக்கும்.

sky தமிழ் NEWS
தனித்துவமே நமது அடையாளம்
+94757000791 skytamil.lk@gmail.com skytamilnews

துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

# தனித்துவமே நமது அடையாளம்

துணிந்தெழ சஞ்சிகையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் எழுத்தாளுமைகளுக்கும்
வாசகர் நெஞ்சங்களுக்கும், அனைத்து உறுப்பினர்களுக்கும்
இதயபூர்வமான நன்றிகள்...!




#Thuninthelu www.skytamilmedia.com